செய்தி வெளியீடு எண்:547 நாள்:23.11.2016

<u>செய்திவெளியீடு</u>

## மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜூ அவர்கள் தலைமையில் விவசாயிகளின் இன்னல்களை போக்கிட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்க உறுப்பினர்களுக்கு மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் மூலம் பயிர்க்கடன் விரைந்து வழங்குவது குறித்து ஆய்வுக் கூட்டம்

********

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜூ அவர்கள் தலைமையில் இன்று (23.11.2016) தலைமைச் செயலகத்தில், கூட்டுறவுத்துறை உயர் அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் மூலம் பயிர்க்கடன் வழங்க எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு முன்னோடி திட்டத்தினை **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் வழங்க ஆணையிட்டுள்ளவாறு செயல்படுத்துவது குறித்து, விரிவாக ஆய்வு செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கூறியதாவது. விவசாய மேம்பாடு மற்றும் விவசாயிகள் நலன் கருதி சிறு, குறு விவசாயிகளுக்கு கூட்டுறவு வங்கிகளால் வழங்கப்பட்டு, 31.3.2016 அன்று நிலுவையில் இருந்த ரூ.5780.92 கோடியிலான பயிர்க் கடன், நடுத்தர கால வேளாண்மைக் கடன் மற்றும் நீண்டகால பண்ணை சார்ந்த கடன் ஆகிய அனைத்தும் தள்ளுபடி செய்து ஆணையிட்டதன் அடிப்படையில், விவசாயிகளுக்கு பயிர்க்கடன் தள்ளுபடி சான்றுகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், கடன் தள்ளுபடி பெற்ற அனைத்து விவசாயிகளுக்கும் உடனுக்குடன் பயிர்க்கடன்கள் வழங்கவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அலுவலர்களைக் கேட்டுக் கொண்டார்.

விவசாய உற்பத்தியை அதிகரிக்கவும், விவசாயிகளின் வருவாயைப் பெருக்கும் பொருட்டு, நடப்பாண்டில் ரூ.6,000 கோடி அளவிற்கு வட்டியில்லா பயிர்க் கடன் வழங்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டு, 22.11.2016 வரை 3,59,778 விவசாயிகளுக்கு ரூ.2161.99 கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. இதில் 44,349 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு ரூ.222.90 கோடி பயிர்கடன் வழங்கப்பட்டுள்ளது.

இந்திய ரிசர்வ் வங்கி கடந்த 8.11.2016 அன்று புழக்கத்தில் இருந்த 500 மற்றும் 1000 ரூபாய் நோட்டுகள் 9.11.2016 முதல் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று அறிவித்தது. இதனைத் தொடர்ந்து, செல்லத்தக்கவை அல்ல என அறிவிக்கப்பட்ட ரூபாய் நோட்டுக்களை வங்கி கணக்குகளில் செலுத்துவது குறித்தும், அவற்றை மாற்றுவது குறித்தும் உரிய வழிகாட்டுதல்களை அறிவித்தது.

இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் வங்கி என்ற வரன்முறைக்குள் வரவில்லை. இதனால், செல்லத்தக்கவை அல்ல என அறிவிக்கப்பட்ட 500 மற்றும் 1000 ரூபாய் நோட்டுக்களை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் விவசாயிகளிடமிருந்து பெற இயலவில்லை.

மேலும், மத்திய கூட்டுறவு வங்கிகளிடம் கணக்குவைத்திருக்கும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களும் வாரத்திற்கு ரூ.24,000 மட்டுமே ரொக்கமாக பெறும் நிலை எழுந்ததால், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களால் பயிர்க்கடன் வழங்க இயலாத நிலை ஏற்பட்டு முடங்கும் நிலை ஏற்பட்டது.

மேலும், 14.11.2016 அன்று இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்ட அறிவிப்பின் மூலம், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளில் செல்லத்தக்கவை அல்ல என அறிவிக்கப்பட்ட 500 மற்றும் 1000 ரூபாய் நோட்டுக்களை வாடிக்கையாளர்களிடமிருந்து பெற்று அவர்களது கணக்குகளில் வரவு வைக்க இயலவில்லை. செல்லத்தக்கது அல்ல என அறிவிக்கப்பட்ட நோட்டுகளையும் மத்தியக் கூட்டுறவு வங்கிகள் வாயிலாக மாற்றம் செய்ய தடை செய்யப்பட்டுள்ளது.

இந்திய ரிசர்வ் வங்கியின் அறிவிப்புகளால் பாதிக்கப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் பயிர்க்கடன் வழங்கும் பொருட்டும், விவசாயிகளின் பிரச்சனைகளை தீர்க்கும் பொருட்டும், தமிழக விவசாயிகள், எவ்வித சிரமமும் இன்றி அவர்களுடைய விவசாயப் பணியை முன்னெடுத்துச் செல்வதற்கும், பிற அமைப்புகளிடம் கடன் பெற்று பாதிப்பதை தவிர்ப்பதற்காகவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கடந்த 22.11.2016 அன்று ஒரு முன்னோடி திட்டத்தை அறிவித்தார்கள்.

அத்திட்டத்தின்படி, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் தொடர்ந்து விவசாயிகளுக்கு பயிர்க்கடன் வழங்குவது குறித்தும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் இணைக்கப்பட்டுள்ள மத்திய கூட்டுறவு வங்கி கிளைகளில் விவசாய உறுப்பினர்கள் பெயரில் புதிய கணக்குகள் துவங்கி ரொக்கம் வழங்குவது குறித்தும், விவசாயிகளுக்கு தேவையான உரம், விதைகள், உழவு இயந்திரம் மற்றும் இதர உபகரணங்களை வாடகைக்கு வழங்கும்போது கடைபிடிக்கவேண்டிய வழிமுறைகள் குறித்தும், பயிர் காப்பீட்டுத் தொகையினை விவசாயிகளின் பயிர்க்கடன் கணக்கில் வரவு வைத்து தொடர்புடைய காப்பீட்டு நிறுவனத்திற்கு மத்திய கூட்டுறவு வங்கி கிளைகள் 15.12.2016க்கு முன் செலுத்துவது குறித்தும் விரிவாக ஆய்வு செய்யப்பட்டது.

அதன்படி, விவசாயிகளுக்கு கிடைக்க வேண்டிய அனைத்து உதவிகளும் உடனடியாக கிடைத்திட ஏதுவாக, மண்டல இணைப்பதிவாளர்கள், மத்திய கூட்டுறவு வங்கி நிர்வாகிகள், சரக துணைப்பதிவாளர்கள், கள மேலாளர்கள், கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாக குழு மற்றும் பணியாளர்கள் மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்த இத்திட்டத்தின் பலனை இன்றே பெற ஏதுவாக உரிய நடவடிக்கை எடுத்திட உயர் அலுவலர்களுக்கு தக்க அறிவுரை வழங்கப்பட்டது.

அனைத்து மாமண்டல அலுவலர்களும் தொடர்புடைய மண்டலங்களுக்கு உடனடியாக சென்று இத்திட்டத்தினை சிறப்புற செயல்படுத்துமாறு தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டன.

இக்கூட்டத்தில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மைச் செயலாளர் திரு.பிரதீப் யாதவ், இ.ஆ.ப., கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு.அ.ஞானசேகரன், இ.ஆ.ப., கூடுதல் பதிவாளர்கள் திரு.த.ஆனந்த், இ.ஆ.ப., முனைவர் க.இராஜேந்திரன், திரு.இரா.கார்த்திகேயன், திரு.எம்.மோகன், திரு.மு.செந்தமிழ்ச்செல்வன், டாக்டர் நா.வில்வசேகரன், திரு.ம.அந்தோணிசாமி ஜான் பீட்டர், மற்றும் கூட்டுறவுத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: — இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**